# சாலை - பொதுக் குற்றங்களுக்கான அபராதத்தில் சிறப்புக் கழிவு

## டிபிகேஎல் வழங்குகிறது

கோலாலம்பூர், பிப். 2-

இவ்வாண்டு கூட்டரசுப் பிரதேச தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு நேற்றுத் தொடங்கி இம்மாதம் 29ஆம் தேதி வரையில் சாலை, பொதுக் குற்றங்களுக்கான பொது அபராதத் தொகையில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் (டிபிகேஎல்) சிறப்புக் கழிவு வழங்குகிறது.

ஆனாலும் இந்தச் சிறப்புக் கழிவு உள்நாட்டினருக்கு மட்டுமே என டிபிகேஎல் தரப்பு தமது அதிகாரப்பூர்வ ஃபேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

வாகனம் நிறுத்துதல் போன்ற சாலைக் குற்றங்கள் குறிப்பாக மோட்டார் சைக்கிளுக்கு 10 ரிங்கிட் எனவும் கார், எம்பிவி ரக வாகனம், சிறுரக லோரிகளுக்கு 20 ரிங்கிட் எனவும் பேருந்து, கனரக வாகனங்களுக்கு 50 ரிங்கிட் எனவும் அபராத சிறப்புக் கழிவு வழங்கப்படுகிறது.

அதேசமயம் கடை உரிமையாளர்கள், உரிமம் உள்ளிட்ட குற்றங்களுக்கான அபராதத்தில் 100 ரிங்கிட் சிறப்புக் கழிவு வழங்கப்படுகிறது.

இருப்பினும் இந்தச் சிறப்புக் கழிவானது கறுப்புப் பட்டியலிடப்பட்ட குற்றங்கள், 1997 பொருள் போக்குவரத்து, சிறு நிலைச் சட்டத்தின் கீழ் உள்ள பொது குற்றங்கள், 2022 பசார் போரோங் விதிமுறைக்கு உட்பட்ட குற்றங்கள், முறையான பணி




பெர்மிட் இன்றி அந்நியத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துதல் போன்ற குற்றங்களுக்குப் பொருந்தாது.

அது மட்டுமன்றி 2003 (கூட்டரசுப் பிரதேசம் கோலாலம்பூர்) ஹோட்டல் சட்டம், 1992 கூட்டரசுப் பிரதேசம் கோலாலம்பூர்) கேளிக்கைச் சட்டம், 1982 கூட்டரசுப் பிரதேசம் (திட்டமிடல்) சட்டம், 1974 கட்டடம், வடிகால், சாலைச் சட்டத்தின் கீழ் உள்ள ஒப்புதல் சார்ந்த குற்றங்களுக்கும் இந்தச் சிறப்புக் கழிவு வழங்கப்படவில்லை.

இது குறித்த மேல் விவரங்களுக்கும் அபராதத் தொகையைச் செலுத்துவதற்கும் Pay@KL என்ற செயலியைப் பொதுமக்கள் பயன்படுத்தலாம்.